1984 மார்ச் 5] [பேரவைத் தலைவர்]

மேலும் 24-2-1984 ஆம் தேதிய பதிப்பின் முதல் பக்கத்தில் 'வருந்துகிறோம்' என்ற தலைப்பிட்டு வருத்தத்தினைத் தெரிவித்து, இழிவு படுத்தும் நோக்கம் இல்லை என்றும் பத்திரிகை வெளியிட்டுள்ளது. பேரவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கு இணக்கமாக இந்தப் பத்திரிகையின் ஆசிரியர் வருத்தத்தை முதல் பக்கத்தில் வெளியிட்டுள்ளமைக்கு என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே இப் பிரசசினையில் மேல் நடவடிக்கை தேவையில்லை என்று கருதுகிறேன்.

மேலும் அவையின் கண்ணியத்தைக் குறைக்கும் வகையிலோ அல்லது உறுப்பினர்களை இழிவு படுத்தியோ கருத்துப் படங்கள் வெளியிடுவதைத் தவிர்க்க வேண்டும் என்று பத்திரிகைகளைக் கேட்டுக் கொண்டு இப் பிரச்சினையை இத்துடன் விட்டு விடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அறிவிப்பு.

ஆளுநரிடமிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து 25-2-1984 ஆம் தேதியிட்ட கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றது என்பதை பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"I have received with satisfaction your Resolution thanking me for my Address on the 13th February 1984 to the Members of the Legislature".

5. தகவல் கோரல்.

அ. மழையினால் தென் மாவட்டங்கள் பாதிக்கப்பெற்றுள்ளது,

திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கும், நேற்றைய முதல் நாளும் பொழிந்த பெரு மழையின் காரணமாக விளாத்திக்குளம், தூத்துக்குடி, ஆத்தூர், புன்னக்காயல், நெல்லை, பாளையங்கோட்டை ஆகிய பகுதிகள் பாதிக்கப்பட்டு. அந்த வெள்ளத்தினால், உயிரும், உடமைகளும் பாதிக்கப்பட்டதாக நாம் பத்திரிகையின் வாயிலாக அறிகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 54 ஆவது விதி இருக்கிறது. அந்த விதியின் கீழ் அறிப்புக் கொடுக்கலாம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS